# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:-18 தேதி:-19.06.2010.

## கூட்டு நடவடிக்கைக் குழு முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே!

BSNLஐ தகர்க்க அரசும், நிர்வாகமும் செய்யும் சதிகளை முறியடிக்க இந்திய நாடு முழுவதும், 14.06.2010 அன்று அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. மாவட்ட, மாநில மற்றும் அகில இந்திய மட்டங்களில் தோழர்கள் எழுச்சியுடன் பங்கேற்ற தர்ணா போராட்டங்கள் 16.06.2010 அன்று நடை பெற்றது. இந்த போராட்டங்கள் ஒரு குறுகிய கால அவகாசத்தில் நடை பெற்றாலும் ஊழியர்களின் உணர்வு பூர்வமான பங்கேற்பு பாராட்டத் தக்கது. போராட்டங்களில் பங்கேற்ற தோழர்களையும் அதற்காக உழைத்திட்ட தோழர்களையும் மனதார வாழ்த்துகிறோம்.

17.06.2010 அன்று புதுடெல்லியில் NFTE மற்றும் FNTO உள்ளிட்ட அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் SNEA பொதுச் செயலர் தோழர் ஜோகி தலைமையில் கூடி எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக விவாதித்தது. 3G மற்றும் BWA(அகலக் கற்றை கம்பியில்லா தொடர்பு)க்காக BSNL நிறுவனம் ஒரு மிகப்பெரிய தொகையினை செலுத்த மத்திய அரசு நிர்பந்தம் செய்வதை ஆழ்ந்த கவலையுடன் பரிசீலித்தது. BSNL நிறுவனம் 3G ஸ்பெக்ட்ரத்திற்கான கட்டணமாக 10,186 கோடி ரூபாய்களை ஏற்கனவே செலுத்தியுள்ளது. BWA ஸ்பெக்ட்ரம் கட்டணமாக 8,313 கோடி ரூபாய்களை ஜூன் 22ஆம் தேதிக்குள் கட்ட வேண்டும் என உத்தரவினை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இரண்டுக்குமாக மொத்தம் 18,499 கோடி ரூபாய்களை கட்ட வேண்டிய நிர்பந்தம் BSNLக்கு உருவாகி உள்ளது. ஏர்டெல் மற்றும் வோடாபோன் உள்ளிட்ட எந்த ஒரு தனியார் நிறுவனமும் இதுவரை இந்த அளவிற்கான கட்டணத்தை இது வரை செலுத்தவில்லை. மத்திய அரசின் இந்த உத்தரவு BSNL நிறுவனத்தை நிர்மூலப்படுத்தும் முயற்சியே தவிர வேறொன்றுமில்லை. ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் கலந்துக் கொள்ளாத BSNL நிறுவனத்தை இவ்வளவு பெரிய தொகையினை கட்டச் சொல்வதில் எந்த விதமான நியாயமும் இல்லை. இந்த 18,499 கோடி ரூபாய்களை BSNL நிறுவனம் கட்டிவிட்டது என்றால் நமது நிறுவனத்திடம் உள்ள கையிருப்பு தொகை எதுவும் இருக்காது. ஒட்டாண்டி நிலை ஏற்படும்.

எனவே கூட்டு நடவடிக்கைக் குழு நீண்ட விவாதங்களுக்கு பின் ஏக மனதாக கீழ்கண்ட முடிவுகளை எடுத்துள்ளது.

> ஸ்பெக்ட்ரம் கட்டண சிக்கலுக்கு தீர்வு காண பாரத பிரதமர், மத்திய நிதி அமைச்சர் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சர் ஆகியோரை உடனடியாக சந்திப்பது.

> ஸ்பெக்ட்ரம் கட்டணம் தொடர்பாக BSNL அதிகாரிகள் மற்றும் ஊழியர்களிடமிருந்து 3 லட்சம் அஞ்சல் அட்டைகளை பிரதமருக்கு அனுப்பும் இயக்கத்தை நடத்துவது.

> BSNL நிறுவனத்திற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சிக்கலை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே கடுமையான பிரச்சாரத்தை நடத்துவது.

BSNL க்கு ஏற்பட்டுள்ள சவால்களை சந்திக்க மேற்கண்ட முடிவுகளை சிறப்பாக அமுல்படுத்துவோம். அனைத்து சங்க நிர்வாகிகளையும் ஒன்றிணைத்து முடிவுகளை நிறைவேற்றுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**M.முருகையா,**
**மாநில செயலர்(பொறுப்பு)**